# இது பாசிசமா, பாயாசமா முதல்வர் விஜய்?

**கருத்துரிமைதான் ஜனநாயகத்தில் அனைத்து மக்களுக்குமான ஒரே ஆயுதம். அந்தக் கருத்தாயுதத்தைப் பறித்து, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் கொடூரத்தனம்தான் பாசிசம். ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களில் விஜய் தலைமையிலான த.வெ.க அரசு ஜனநாயகப் படுகொலைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.**

விஜய் ஆட்சியின் தவறுகள், முறைகேடுகள், ஊழல்கள் இவற்றைப் பற்றிய உண்மைகள் வெளிவந்து விடக்கூடாது என்ற பதற்றம் நிர்வாகத்தின் மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை கண்கூடாகத் தெரிகிறது.

ஊழலை ஒழிக்க வந்த உத்தமர் போல ஒப்பனை செய்துள்ள விஜய், தன் ஆட்சியின் நிர்வாக சீர்கேடுகளைத் தடுக்கும் திறனின்றி, அவற்றை மறைப்பதிலும் திசை திருப்புவதிலுமே கவனமாக இருக்கிறார். மேடையில் ஏறினால், “என் ஆட்சியில் ஒரு ரூபாய்கூட லஞ்சம் இருக்காது. யாராவது லஞ்சம் கேட்டால் இந்த விஜய் பெயரைச் சொல்லுங்க“ என்று வீரவசனம் பேசுவார். சட்டமன்றத்தில் சொல்ல வேண்டிய பதில்களைச் சொல்லாமல், “அரசுப் பணத்தைத் தொட மாட்டோம். தொட்டா விடமாட்டோம். தொட்டவங்களையும் விடமாட்டோம்” என்று பஞ்ச் டயலாக் பேசுவார். அமைச்சரவைக் கூட்டத்தில், “தெரிஞ்சவங்க தெரியாதவங்கன்னு பார்க்க மாட்டேன். தப்பு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அமைச்சர் பதவி பறிக்கப்படும்” என்று அவர் பேசியதாக செய்திகள் பரவும். எல்லாமும் வாய் வீரம் மட்டும்தான்.

**வேலூர் மாவட்டத்தில் செங்கல் சூளைகளில் மாமூல் கேட்ட த.வெ.க நிர்வாகி,**

**கடலூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வண்டல் மண் எடுப்பதற்கு விவசாயிகளிடம் மாமூல் கேட்ட த.வெ.க நிர்வாகி,**

**தூத்துக்குடி மாவட்டத்தில் வாரச்சந்தையில் மாமூல் கேட்ட த.வெ.க எம்.எல்.ஏ.,**

**அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் தலா 30 இலட்சம் ரூபாய் வரை இலஞ்சம் வாங்கப்படுவதாக த.வெ.க. வழக்கறிஞராலேயே குற்றம்சாட்டப்பட்ட த.வெ.க. அமைச்சர்,**

**பழநி கோயிலுக்குச் சொந்தமான 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தைத் தனியாரிடம் 2 கோடி ரூபாய்க்கு பத்திரப்பதிவு செய்ததில் தவறு நடந்திருக்கிறது என்பதை ஊடகங்களிடமே ஒப்புக்கொண்ட த.வெ.க அமைச்சர்கள்**

**-எனக் கடந்த இரண்டு மாதங்களாக வெளிப்படும் லஞ்ச ஊழல் விவகாரங்களில் விஜய் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? எத்தனை பேர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்? எவ்வளவு பணம் அரசு கஜானாவுக்கு வந்திருக்கிறது?**

சொந்தக் கட்சிக்காரர்களின் லஞ்ச ஊழல் நடவடிக்கைகளை மறைப்பதை மட்டுமே விஜய் அரசு கடந்த இரண்டு மாதங்களாகச் செய்து வருகிறது. மறைக்கப்படும் ஊழல்களையும், உண்மை நிலவரங்களையும் வெளிக் கொண்டு வரும் சமூக வலைதளச் செயல்பாட்டாளர்களைக் குறி வைத்து, காவல்துறை மூலமாக அச்சுறுத்தி, கைது செய்யும் நடவடிக்கையை த.வெ.க. அரசு மேற்கொண்டு வருகிறது. ஜனநாயகம் வழங்கியுள்ள கருத்துரிமைக்கு எதிரான பாசிச அடக்குமுறையை ஏவிக் கொண்டிருக்கிறது விஜய் அரசு.

**சினிமா ரசிகர்களாக சமூக வலைதளங்களில் செயல்பட்டு வந்த தன்னார்வலர்களைக் கொண்டு தனக்கு ஆதரவாகவும், தி.மு.க. ஆட்சிக்கு எதிரான பொய்களையும் பரப்பி ஆட்சிக்கு வந்தவர் விஜய். அவருடைய ஒட்டுமொத்த கட்சி நிர்வாகிகளுமே ‘ரீல்ஸ்’ வகையறாக்கள்தான். எந்தச் சமூக வலைதளங்களும், அதில் பதிவிடப்பட்ட ரீல்ஸ்களும் தங்களை ஆட்சி வரவைத்ததோ, அந்தத் தளங்களும் ரீல்ஸ்களும்தான் இன்று கொள்கை உணர்வுமிக்க GenZ தலைமுறையினரின் மூலம் த.வெ.க அரசின் மோசடிகளை அம்பலப்படுத்துகின்றன. பொய்களைப் பரப்புவதற்கு தங்களுக்குப் பயன்பட்ட சமூக வலைதளங்கள், இப்போது உண்மைகளை வெளிப்படுத்தப் பயன்படுவதால் த.வெ.க பதறுகிறது.**

ஊடகங்களின் வாயைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது போல சமூக வலைதளங்களையும் கட்டுப்படுத்த நினைக்கிறது விஜய் அரசு. அது எளிதல்ல என்பதால்தான், உண்மைகளைப் பதிவிடுவோரை முடக்கி விட வேண்டும் என்ற திட்டத்துடன் அவர்கள் மீது வழக்குகளைப் பதிவு செய்து மிரட்டும் வேலைகளில் இறங்கியுள்ளது.



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

GenZ தலைமுறையினர் பொது இடங்களில் நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள். அதற்கு அனைத்துத் தரப்பினரும் வருகை தருகிறார்கள். த.வெ.க ஆட்சியின் அவலங்களை உரைவீச்சாகவும் கலைவடிவங்களிலும் வெளிப்படுத்து கின்றனர். அதனைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் முதல் புரிந்து, உணர்ந்து வரவேற்கிறார்கள். GenZ நிகழ்வுகளின் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பதிவிடப்படுகின்றன. அவை பல இலட்சம் பார்வையாளர்களைச் சென்றடைந்து, விஜய் ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளை அம்பலப்படுத்துகின்றன.

இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்துச் சுதந்திரத்திற்கு சவால் விடும் வகையில் த.வெ.க. அரசு பாசிசத் தன்மையுடன், சமூக வலைதளப் பதிவாளர்கள் மீது வழக்குகளைப் பதிவு செய்து, கைது நடவடிக்கையை மேற்கொள்கிறது.

தாம்பரத்தைச் சேர்ந்த சரண் ஜெயராமன் என்ற சமூக வலைத்தள இளம் பதிவர் மீது அவசர அவசரமாக வழக்குத் தொடரப்பட்டு, இரவோடு இரவாக கைது செய்து, அதிகாலையில் நீதிபதி முன் ஆஜர்படுத்தியது காவல்துறை. தி.மு.க.வின் சட்டத்துறையைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் களமிறங்கி, அந்தப் பதிவருக்கு ஆதரவாக ஆஜராகி, வழக்கின் தன்மையை எடுத்துரைத்ததன் விளைவாக, அவரைச் சிறைக்கு அனுப்ப மறுத்து, பிணையில் விடுவித்தது நீதிமன்றம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அன்பானந்தம் என்ற GenZ இளைஞரைக் கைது செய்வதற்காக, த.வெ.க அரசின் காவல்துறை நள்ளிரவுக்கு மேல் வீடு புகுந்து, தீவிரவாதி போல தேடுதல் வேட்டை நடத்தியது. மேடைகளில் ஆதாரப்பூர்வமாகப் பேசுவதுடன், சமூக வலைதளங்களில் அதிகளவிலான பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் ‘ரீல்ஸ்’களையும் அன்பானந்தம் பதிவிட்டதால் பதற்றமான த.வெ.க அரசு தனது காவல்துறை மூலம் இந்த அடாவடிச் செயலை மேற்கொண்டது. கழகக் குடும்பத்தவரான அன்பானந்தத்திற்கு ஆதரவாக மாவட்டக் கழக நிர்வாகமும் வழக்கறிஞர்களும் துணை நின்று, சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொண்டதன் விளைவாக, அன்பானந்தம் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி, பிணை பெற்றார். அவரைச் சிறையில் அடைத்து சித்திரவதை செய்ய நினைத்த த.வெ.க அரசின் முயற்சி, நீதியின் முன்னால் முறிந்து போனது.

கரூர் மாவட்டம் குளித்தலையைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி பரளி தங்கம் சமூக வலைதளங்களில் தீவிரமாகச் செயல்படுபவர். விஜய்யை விமர்சித்து பதிவு செய்தார் என்று சொல்லி காவல்துறை ஈவு இரக்கமின்றிக் கைது செய்து வாகனத்தில் ஏற்றி நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்திய போது, அந்தக் கொடூரத்தைச் சகிக்க முடியாமல் நீதிபதியே பரளி தங்கத்திற்கு ஜாமீன் வழங்கினார். **மேடைகளில் பொதுமக்கள் முன்னிலையில் பீப் வார்த்தைகளில் பேசுகின்ற முதல்வர் விஜய்யை விட மோசமாக தமிழ்நாட்டில் இன்னொருவர் பேசவோ பதிவு செய்யவோ முடியுமா?**

சென்னையைச் சேர்ந்த விநோத் என்ற GenZ இளைஞர் தனது சமூக வலைதளப் பக்கத்தில், பழநி கோயில் நில மோசடி பற்றிப் பதிவிட்டிருந்தார். நிலத்தை தனியாருக்குப் பதிவு செய்தது பற்றி இரண்டு அமைச்சர்கள் அளித்த பேட்டியில், “தவறு நடந்துள்ளது“ என்று தெரிவித்ததைச் சுட்டிக்காட்டி, **“தி.மு.க. அ.தி.மு.க. ஆட்சிக்காலங்களில் நடந்தால் ஊழல், த.வெ.க. ஆட்சியில் நடந்தால் தவறு”** என்பதுதான் அவரது பதிவு. இது ஒரு மிகச் சாதாரணமான அரசியல் விமர்சனம். அரசியல் சட்டம் அனுமதித்திருக்கும் கருத்துச் சுதந்திரம். இதனைக்கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல் காவல்துறை அவர் மீது வழக்குப் பதிவு செய்தது. விசாரணைக்கு அழைப்பதாகக் கூறி, காவல்நிலையத்திற்கு வரவைத்து, கைது செய்து, இரவோடு இரவாக நீதிபதி முன் ஆஜர்படுத்தி சிறைக்கு அனுப்பிவிட்டது.

விஜய் தலைமையிலான த.வெ.க அரசின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கையை எதிர்த்து **உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சட்டத்துறையின் சார்பில் வழக்கறிஞர் சரவணன் அண்ணாதுரை வழக்குத் தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம், “அரசியல் விமர்சனங்களுக்கு அவதூறு வழக்குதானே தொடர முடியும்? குற்ற வழக்குத் தொடர்ந்தது ஏன்? இது போல செயல்படக் கூடாது என்று அரசிடம் தெரிவியுங்கள்“ என அரசு வழக்கறிஞருக்கு அறிவுறுத்தியது. எந்தச் செயலுக்கு என்ன வகையான வழக்குத் தொடுக்க வேண்டும் என்கிற சட்ட அறிவு கூட இல்லாமல், பழிவாங்கும் உணர்ச்சியுடன் செயல்படுகிறது த.வெ.க. அரசு.**

சமூக வலைதளங்களில் த.வெ.க. அரசுக்கு ‘ஜால்ரா’ ரீல்ஸ் போடுபவர்கள் மட்டுமே செயல்பட வேண்டும் என்றும், விமர்சனங்களே கூடாது என்றும் நினைக்கிறார்கள். கருத்துரிமையின் கழுத்தில் கத்தியை வைத்துக் கீறுகிறார்கள். இதன் அடுத்த கட்டமாக, ஊடகவியலாளர் விஜயனை விஜய் அரசு ‘காவல்துறை விசாரணை’ என்ற பெயரில் திரும்பத் திரும்ப அழைத்து அலைக்கழித்தது. ஊடகத்துறையினர் பல தரப்பினரிடமும் தொடர்பு கொண்டு பேசுவதும், செய்திகள் சேகரிப்பதும் அவர்களின் துறை சார்ந்த இயல்பான செயல்பாடுகளாகும். விஜயன் தன் ஊடகத்துறைப் பணி காரணமாகத் தொடர்பு கொண்டு பேசியதில் சந்தேகம் கொண்டு, அவரை விசாரணைக்கு அழைத்த காவல்துறை, அவர் எங்கே இருக்கிறார், அவரது நிலை என்ன என்பதுகூடத் தெரியாத வகையில் செயல்பட்டது. இது குறித்து ஊடகத்துறையினரும், சமூக வலைதளச் செயல்பாட்டாளர்களும் கேள்வி எழுப்பிய பிறகே, ஊடகவியலாளர் விஜயனை வெளியே அனுப்பி, விளக்க அறிக்கையும் வெளியிட்டது காவல்துறை.

**பாசிசமா, பாயாசமா என த.வெ.க மேடைகளில் அருவருப்பான உடல்மொழியுடன் பேசியவர் விஜய். தற்போது அவர் முதல்வராக இருக்கிறார். கருத்துரிமையை நசுக்கி, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் உங்கள் தலைமையிலான த.வெ.க அரசின் கைது நடவடிக்கைகள் பாசிசமா, பாயாசமா முதல்வர் விஜய்?**

### புதுடெல்லியில் உண்ணாவிரதம் இருந்து வரும் சமூக ஆர்வலர்

## சோனம் வாங்சுக் வலுக்கட்டாயமாக மருத்துவமனையில் அனுமதி!

### 21-வது நாளை எட்டிய சோனம் வாங்சுக் உண்ணாவிரதம்!

*புதுடெல்லி, ஜூலை 19-*

ஜந்தர் மந்தரில் 20 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக்கை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த ஜூன் மாதம் தொடர் போராட்டத்தை தொடங்கினர். இப்போராட்டத்தில் பங்கேற்ற சமூக ஆர்வலர் சோனம் வாங்சுக், கடந்த 20 நாட்களுக்கும் மேலாகத் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அவரது உடல் நிலை மோசமடைந்ததை அடுத்து, அவரது உயிரைக் காக்க தினசரி மருத்துவப் பரிசோதனை மற்றும் தேவையான மருத்துவச் சிகிச்சைகளை மேற்கொள்ள டெல்லி உயர் நீதிமன்றம் ஜூலை 16ஆம் தேதி உத்தரவிட்டது. 20 நாட்களுக்கும் மேலான உண்ணாவிரதத்தால் சோனம் வாங்சுக் தனது உடல் எடையில் சுமார் 9 கிலோவிற்கும் அதிகமாக இழந்து, அவரது உள் உறுப்புகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் எச்சரித்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலையில் ஜந்தர் மந்தர் போராட்டக் களத்திற்கு வந்த டெல்லி போலீசார், நீதிமன்ற உத்தரவு மற்றும் அவரது மோசமான உடல் நிலையைக் சுட்டிக்காட்டி, அங்கிருந்தவர்களின் பலத்த எதிர்ப்புகளுக்கு இடையே அவரை வலுக்கட்டாயமாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அப்போது, எனது உடல் நிலை 20 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், தன்னைப் பற்றி கவலைப்படாமல் 20 ஆம் தேதி நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் சோனம் வாங்சுக் வேண்டுகோள் விடுத்தார். இதனிடையே சோனம் வாங்சுக் மீது தாக்குதல் நடத்த முயற்சி நடந்ததாக கரப்பான் பூச்சி ஜனதா கட்சி அமைப்பாளர் அபிஷித் திப்கே குற்றம்சாட்டி உள்ளார். மேலும், சோனம் வாங்சுக் மருத்துவமனைக்கு வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்து தான் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்குவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

### காரைக்குடியில் பட்டப்பகலில்

## தாசில்தார் வீட்டில் 50 பவுன் நகை கொள்ளை!

### காரைக்குடியில் பரபரப்பு!

*சிவகங்கை. ஜூலை 19-*

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வள்ளுவன் நகரில் வசித்துவருபவர் தாசில்தார் சாந்தி. இவர் சிவகங்கையில் கலெக்டர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். நேற்று முன்தினம் வீட்டை பூட்டிவிட்டு வேலைக்கு சிவகங்கை சென்று விட்டார் .அவரது மருமகள் வந்து வீட்டை பார்த்த பொழுது வீட்டின் பின்புற கதவுகள் உடைக்கப்பட்டு இருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தார். இது குறித்து சாந்தியிடம் போனில் தகவல் கூறினார் .சாந்தி வீட்டிற்கு வந்து பார்த்த போது வீட்டின் பின்புறம் கதவை உடைத்து பீரோவில் இருந்த லாக்கரை உடைத்து ஐம்பது பவுன் தங்க நகைகள் திருடப்பட்டது தெரியவந்தது. இது குறித்து காரைக்குடி வடக்கு போலீஸில் திருமதி சாந்தி புகார் கொடுத்தார் .புகாரின் பேரில்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் காரைக்குடி டி.எஸ்.பி. புஸ்னிக் ஆகியோர் கொள்ளை நடந்த வீட்டை பார்வையிட்டார்கள்.

காரைக்குடி வடக்கு போலீசார் இது குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். அப்பகுதி மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிஆகும். பட்டப் பகலில் தாசில்தாரின் வீட்டின் பூட்டை உடைத்து ஐம்பது பவுன் கொள்ளை போனது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பிரிட்டனின் புதிய பிரதமர் ஆகிறார் ஆண்டி புர்ன்ஹாம்!

*லண்டன், ஜூலை 19-*

பிரிட்டனில் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த கெய்ர் ஸ்டார்மர் பதவியில் இருந்து ராஜினாமா செய்ய உள்ளதாக கடந்த மாதம் அறிவித்தார். இதைத் தொடர்ந்து பிரிட்டனின் தொழிலாளர் கட்சித் தலைவராக கட்சியின் மூத்த தலைவர் ஆண்டி புர்ன்ஹாம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து அவரே பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

அவர் வரும் திங்கட்கிழமை (ஜூலை 20) பதவியேற்கவுள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஆண்டி புர்ன்ஹாம் ஏற்கெனவே கிரேட்டர் மான்செஸ்டரின் மேயராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து ஆண்டி புர்ன்ஹாம் பேசும் போது, “பொருளாதார வளர்ச்சி, பொதுச் சேவைகளை வலுப்படுத்த, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் களைய நான் பாடுபடுவேன்” என்று தெரிவித்துள்ளார்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தொகுதிக்குட்பட்ட நரிக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆலாத்தூர், திருவளர்நல்லூர், தச்சனேந்தல், வி.கரிசல்குளம், கல்விமடை, பூம்பிடாகை, கருவக்குடி, எஸ். நாங்கூர், களத்தூர், பிள்ளையார்குளம், ஆவரங்குளம் ஆகிய பகுதிகளில் முன்னாள் நிதி அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர், விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

### ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!

